க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி– திருக்குவளை, நாகை மாவட்டம் – 610 204.
தொடர்புக்கு... 7598868760, 9524302724.
மின்னஞ்சல்: srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2015 - 16
# பத்தாம் வகுப்பு தமிழ் இரண்டாம் தாள் - விடைக்குறிப்புகள்

## பிரிவு – 1 – பகுதி – 1

01. அ. திண்ணை
02. ஆ. அஃறிணைப் பொதுப் பெயர்
03. அ. படித்தான்
04. ஆ. முன்பனிக்காலம்
05. ஈ. பிறப்பு

## பகுதி – 2

06. குறிப்புப் பெயரெச்சம்
07. ஏவல் விடை
08. காஞ்சித் திணை
09. மூன்று
10. அன்ன

## பகுதி – 3

11. ஆடியது
12. கட்டளைத் தொடர்
13. இருவினை - தன்வினை, பிறவினை (அ) செய்வினை, செயப்பாட்டு வினை
14. பெண்கள் பெற வேண்டிய**வை** பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை
15. **இன்றைக்கு** ஒரு கிலோ **அவரைக்காய்** வாங்கி வந்தேன்.
16. நாளை நடைபெறவிருக்கும் **போட்டியில்** இந்தியா கண்டிப்பாக **வெற்றி பெறும்**.
17. தமிழமுது (அ) தமிழ்அமுது
18. மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை முதலியவை தொழிற்கல்வித் துறைகளாம்.
19. கயிறு திரித்தல் - பொய்யானவற்றைக் கூறுதல்
20. **எனக்கு** திருக்குறளில் ஆர்வம் மிகுதி.

## பிரிவு – 2 – பகுதி – 1

21. 1. செம்மை + மொழி = செம் + மொழி (ஈறு போதல் விதி) = செம்மொழி

22. தளர்ந்து - தளர் + த்(ந்) + த் + உ -
தளர் - பகுதி, த் - சந்தி, அது ந் ஆனது விகாரம், த் - இறந்த கால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி

23. விடை எட்டு வகைப்படும்.
அவை: சுட்டு விடை, மறைவிடை, நேர்விடை, ஏவல்விடை, வினா எதிர்வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை

24. வெண்பாவின் வகைகள் ஆறு
அவை: குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா

25. அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள் நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் ஆகும்.
சான்று: போ போ - விரைவு
தீ தீ தீ - அச்சம் (பிற சான்றுகளும் உள்ளன)

26. செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைமுற்று ஆகும்.
எடுத்துக்காட்டு : உழுதான். செய்பவன் - உழவன், கருவி, கலப்பை, நிலம் - வயல், செயல் - உழுதல், காலம் - இறந்தகாலம், செய்பொருள் - புழுதியாதல், நெல்

27. வெட்சித் திணை, கரந்தைத் திணை, நொச்சித் திணை, காஞ்சித் திணை (பிற விடைகளும் உள்ளன)

## பிரிவு – 3 – பகுதி – 1

28. இப்பாடலில் அடிமறி மண்டில ஆசிரியப்பா பயின்று வந்துள்ளது.

இலக்கணம் : ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி மாற்றிப் படித்தாலும் ஓசையும் பொருளும் மாறாது வருவது, அடிமறி மண்டில ஆசிரியப்பா ஆகும்.

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் :

1. அளவடிகளைப் (நான்கு சீர்) பெற்று வரும்
2. இயற்சீர் (மாச்சீர், விளச்சீர்) பயின்று வரும். பிற சீரும் வரும். ஆனால், வஞ்சியுரிச்சீர்கள் வாரா.
3. ஆசிரியத் தளைகள் பயின்று வரும். பிற தளைகள் கலந்தும் வரும்.
4. மூன்றடிச் சிற்றெல்லையும், பாடும் புலவனின் மனக்கருத்திற்கேற்பப் பல அடிகளைப் பெற்றும் வரும்
5. அகவலோசை பெற்று வரும்
6. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

29. இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி சொல் பின்வருநிலையணி.

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, சொல் பின்வருநிலையணி..

இக்குறட்பாவில் துப்பு என்னும் ஒரே சொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல் பின்வருநிலையணி ஆகும். (அல்லது)

**அணி இலக்கணம் :** புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.

**எடுத்துக்காட்டு:** தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்

**விளக்கம்:** இக்குறட்பாவில் தீயவர்களைத் தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து கூறுவதுப் போலக் கூறித் தீயவர்கள் தம் மனம் போக்கில் தீய செயல்களைச் செய்து அழிவார்கள் எனப் பழித்துக் கூறப்பட்டுள்ளது.

**எடுத்துக்காட்டு:** கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர் – சொல்வீரால்
மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென் முன்

**விளக்கம்:** இப்பாடலில், திருப்பாற்கடலைக் கடைந்த போது உண்டான நஞ்சினைச் சிவபெருமான் உண்டார் என்பது புராணக்கதை. இதனைக் காளமேகப் புலவர் ஒருவன் கல்லால்அடித்ததற்காகவும், மற்றொருவன் காலால் உதைத்ததற்காகவும் வெட்கப்பட்டு இறைவன் நஞ்சினை உண்டான் எனப் பழிப்பது போலப் புகழ்ந்துள்ளார்.

30. அலகிடுதல்:

| | | | | |
|---|---|---|---|---|
| பகல் / வெல் / லும் | - | நிரை நேர் நேர் | - | புளிமாங்காய் |
| கூ / கை / யைக் | - | நேர் நேர் நேர் | - | தேமாங்காய் |
| காக் / கை | - | நேர் நேர் | - | தேமா |
| இகல் / வெல் / லும் | - | நிரை நேர் நேர் | - | புளிமாங்காய் |
| வேந் / தர்க் / கு | - | நேர் நேர் நேர் | - | தேமாங்காய் |
| வேண் / டும் | - | நேர் நேர் | - | தேமா |
| பொழு / து | - | நிரைபு (நிரைநேர்) | - | பிறப்பு |

## பகுதி – 2

31. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்பற்று : முன்னுரை - தமிழ்ப் பெயர் - தமிழ்ப் பண - நான்காம் தமிழ்ச் சங்கம் - விடுநனி கடிது - தனித்தமிழ் நடை - முடிவுரை

32. கமலநாதன் மனம் திருந்துதல்: முன்னுரை - கமலநாதன - நண்பனின் மரணம் - கமலநாதன் மனம் கலங்குதல் - புகை உயிருககுப் பகை - மெல்ல மெல்ல மற - கமலநாதனின் முயற்சி - முடிவுரை

33. அன்றாட வாழ்வில்பயன்படும் சட்டங்கள் : முன்னுரை - நுகர்வோர்பாதுகாப்புச் சட்டம் - தகவல் அறியும் உரிமைச் சட்டம் - முடிவுரை.

## பகுதி – 3

34 அ. நம்பி! நான் நேற்று திரைப்படம் பார்க்கப் போயிருந்தேன். அங்குள்ள கடையில் குளிர்பானம் வாங்கிக் குடித்தேன். குளிர்பானம் விலை மிகவும் அதிகமாக இருந்தது.

ஆ. 55 - ருரு, 82 - அஉ, 140 - கச0, 250 - உரு0

35. அ. தொலைக்காட்சி நவீன இந்தியாவின் அற்புதங்களுள் ஒன்றாகும். கிராமப்புறப் பார்வையாளர்களுக்கென கல்வி, சுகாதாரம், வேளாண்மை மற்றும் குடும்ப நலத் திட்டங்கள் குறித்த நிகழ்ச்சிகள் சிறப்பாகத் தயாரிக்கப்படுகின்றன. ஆர்வமூட்டும் நாடகங்களும் வணிக விளம்பரங்களுக்காகவும் பயன்படுத்துப்படுகின்றது.

ஆ. 1) ஆழம் தெரியாமல் காலை விடாதே 2) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

3) பழிக்குப் பழி 4) வரும் முன் காப்பது சிறந்தது

## பகுதி – 4

36. பொருத்தமான கதை / கவிதை எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்

## பகுதி – 5

37. திரண்டகருத்து : ஆலமரத்தில் பல விழுதுகள் தொங்கின. விழுதுகளுடன் பாம்பொன்றும் தொங்கியது. ஒரு குரங்கு பாம்பினை விழுதெனப் பற்றியதும், வெடுக் எனத் தன் கையை விலக்கிக் கொண்டு மர உச்சியை அடைந்தது. அச்ச உணர்வினால் கீழே தொங்கும் விழுதுகளை எல்லாம் பாம்பெனக் கருதியதோடு தன் வாலையும் பாம்போ என்று பார்த்தது. இது பாரதிதாசனின் அழகின் சிரிப்பில் மலர்ந்த கவிதை.

மையக்கருத்து: பயத்தினால் ஏற்படும் மனக்குழப்பம்.

எதுகை நயம்: கிளையினிற், விளக்கினைத், கிளைதோறும், ஒளிப்பாம்பாய்.

மோனை நயம்: கிளையினிற், கிளைதோறும், கீழுள்ள

விழுதென்று, விளக்கினை, வெடுக்கெனடும்

எவ்விடத்தும் **வேண்டும்**

கற்பனை நயம் : ஆல விழுதுகளை பாம்பென்று என்றெண்ணி பயத்தில் மனக்குழப்பம் அடைந்த குரங்கு தன் வாலையே பாம்பென நினைத்து அச்சமடைவதை தன் கற்பனையில் படைத்துள்ளார் கவிஞர்.

அணி நயம்: விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப் போல என்ற உவமை மூலம் இப்பாடலில் உவமை அணியைக் கையாண்டுள்ளார் கவிஞர்

சுவை : இப்பாடலில் நகைச்சுவை இடம் பெற்றுள்ளது.

சந்தம் : கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா.

தலைப்பு: ஆலில் குரங்கு

## பகுதி 6: 38 வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம்

வலிவலம் கிளை நாள் 13.01.2016

இடம்: வலிவலம்

சேமிப்பு கணக்கெண் 1158002456758

நிலையான கணக்கெண் .......................................

பெயர் . **கி. தேன்மொழி**

ரூபாய் : ஆயிரம் மட்டும் | ரூ.1,000

காசோலை விவரம்

| காசோலை எண் / நாள் | பெறப்பட்ட வங்கி / கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| - | - | - |

காசாளர் எழுத்தர் / மேற்பார்வையாளர்

வலிவலம் கிளை நாள் 13.01.2016

இடம்: வலிவலம்

சேமிப்பு கணக்கெண்

| 1 | 1 | 5 | 8 | 0 | 0 | 2 | 4 | 5 | 6 | 7 | 5 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

நிலையான கணக்கெண்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

பெயர் **கி. தேன்மொழி**

ரூபாய். ஆயிரம் மட்டும் | ரூ.1,000

| காசோலை எண் / நாள் | பெறப்பட்ட வங்கி / கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| - | - | - |

பண விவரம்

| தாள் | தொகை |
|---|---|
| 1000 × 1 | 1,000 |
| 500 × | |
| 100 × | |
| 50 × | |
| 20 × | |
| 10 × | |
| 5 × | |
| காசுகள் | |
| மொத்தம் | 1,000 |



செலுத்துநர் கையொப்பம்

## பகுதி 7:

39. அ. அ. தற்போது திருமணம் வேண்டாம். மேல் படிப்பு படிக்க வேண்டும் என முடிவெடுப்பாள்.

ஆ. ஆசிரியர்கள் மூலம் என் தந்தைக்கு படிப்பின் அவசியத்தை எடுத்துக் கூறச் செய்வேன்.

இ. முடிவெடுக்கும் திறன் / சிக்கலுக்குத் தீர்வு காணும் திறன்

ஆ. அ. சரி

ஆ. நற்குணங்களை உடைய நண்பர்களோடு நட்பு கொள்ள வேண்டும்.

(மாணவரின் விடை சூழலுக்குக்கேற்ப சரியானதாக இருந்தால் மதிப்பெண் வழங்கலாம் - மாற்று விடைகள் உள்ளன)

40. அ) அனுப்புநர் - பெறுநர் - விளித்தல் - பொருள் - செய்தி - இப்படிக்கு - இடம், தேதி - உறை மேல் முகவரி

ஆ) தேதி, தேதி - செய்தி - இப்படிக்கு - உறைமேல் முகவரி.

41. அ) தலைப்பு - சிறுசேமிப்பு - முன்னுரை - மனமிருந்தால் சேமிக்கலாம் - நிலையற்ற செல்வம் - பல்வகைத் திட்டங்கள் - மாணவர் சேமிப்பு - பயன்கள் - முடிவுரை

ஆ) தலைப்பு - காலத்தை வெல்லும் கணினி - முன்னுரை - கணினியின் தோற்றம் - வகைகள் - பயன்பாடு - உள்ளங்கையில் உலகம் - கணினி வழிக் கல்வி - முடிவுரை